வாங்குவதை அரசாங்கம் தடுப்பானேன் ? வேண்டுமானால் அப்படி வருகிற பணத்தைக்கொண்டு ஏழை மாணவர்களுக்கு ஸ்காலர்ஷிப் கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : ஆரம்பப் படிப்பைப் பொறுத்த வரையில, நம்முடைய அரசியல் சட்டத்திலே இலவசமாகப் படிப்புச் சொல்லிக்கொடுக்க வேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கிறது. அந்த விதியை அமல் நடத்தும் முறையில்தான் இது செய்யப்படுகிறது. பணக்காரப் பிள்ளைகளிடமிருந்து இம்மாதிரி சம்பளம் வசூல் செய்யவேண்டுமென்றால், அதுமாதிரி நடக்கும் பள்ளிக்கூடங்கள் அம்மாதிரி சம்பளத்தை வசூல் செய்து, உபாத்தியாயர்களுக்குச் சம்பளத்தையும் அதிலிருந்தே கொடுக்க வேண்டுமென்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

SRI P. S. CHINNADURAI : இத்தகைய ஆசிரியர்கள் முன்னால் எவ்வளவு சம்பளம் பெற்று வந்தார்களோ அதே அளவு அளிக்கப்படும் என்று சர்க்கார் உத்தரவாதம் கொடுத்திருந்தும் கூட, அந்தத் தொகை பூரணமாக அவர்களுக்குக் கொடுக்கப்படாமல் இருப்பதுபற்றிய முறையீடு உபாத்தியாயர்களிடமிருந்து வந்திருக்கிறதா ? மேலும், அவ்வாறு அனுப் பப்படும் தொகையிலிருந்து மணி ஆர்டர் கமிஷனைக் கழித்துவிட்டு பாக்கி யைக் கொடுப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அதற்குத் தனிக் கேள்வி வேண்டும்.

Boys Club.

* 197 *Q.*—SRI S. M. ANNAMALAI (on behalf of SRI M. P. SARATHI): கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) நம் ராஜ்யத்தில் போலீஸ் இலாகாவினால் நடத்தப்படும் Boys' Clubs எத்தனையுள்ளன ? எங்கெங்கே ?

(ஆ) அவைகளுக்கு ஆகும் செலவு எவ்வளவு ?

(இ) அரசாங்கம் வழங்கும் உதவி எவ்வளவு ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : A statement a is placed on the table of the House.

SRI S. M. ANNAMALAI : மேசை மீது வைக்கப்பட்டிருக்கும் அறிக்கை யில் இராமநாதபுரம் ஜில்லாவில் சிவகெங்கையிலும், வடாற்காடு ஜில்லாவில் வேலூரிலும் இத்தகைய க்ளப்கள் ஒவ்வொன்று வைக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் பணம் செலவிடப்படவில்லை சர்க்கார் க்ராண்டும் இந்தக் க்ளப்களுக்கு இல்லை. அதற்குக் காரணமென்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஸ்கீம் ஸாங்ஷன் ஆயிருக் கிறது. ஸ்கீம் எடுத்துக்கொள்வதாக உருவாக்கப்பட்டால் சர்க்கார் க்ராண்ட் கிடைக்கும் ; அதற்குமேல் செலவும் ஆகும்.

SRI A. VEDARATHNAM ; இந்த ஜாப்தாவில் தஞ்சைக்கு மிகக் குறைவான தொகை கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : முன்பு ஒரு கேள்விக்குப் பதிலளிக்கும்போது சொன்னேன், இது அனேகமாக பொதுமக்கள் நன் கொடையிலிருந்து நடைபெறுகிறது என்று, தஞ்சையிலே குறைவாக நன் கொடை அளிக்கப்பட்டிருந்தால், குறைவாகச் செலவழிக்கப்பட்டிருக்கும்.

Women's Welfare Department

* 198 *Q.*—SRI S. M. ANNAMALAI: கனம் முதல் அமைச்சர் அவர் கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) சமுதாய நலத் திட்டப் பகுதிகளில் உள்ள மாதர் நல இலாகா விற்கு மாநில சர்க்கார் பணம் தருகிறார்களா ?

---

a Printed as Appendix I on page 121 infra.